உ

துர்க்காதேவி துணை



தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## நிர்வாகசபை ஆண்டறிக்கையும் வரவு செலவுக் கணக்கு அறிக்கையும்

**01-01-2007 - 31-12-2007**

தெல்லிப்பழை

**2010**

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## தெல்லிப்பழை - 2007

### தர்மகர்த்தாசபை

துர்க்கா துரந்தரி கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. J.P
(தலைவர்)

Dr. தி. திவாகரன்

திரு. பா. பாலகாங்கேயன். U.S.A

திரு. க. ஜெனநாயகம், U. K

திரு. நா. திருநாவுக்கரசு, J.P
(கொல்லங்கலட்டி)

திரு. சி. சண்முகானந்தன். G.S.O

Dr. ந. புவனேந்திரன். U. K

திரு. நா. தவநாதன்
(நிர்வாக இணைச் செயலாளர்)

திரு. ஆறு. திருமுருகன்
(நிர்வாக இணைச் செயலாளர்)

திரு. அ. சண்முகநாதன்
(நிர்வாகப் பொருளாளர்)

### நிர்வாகசபை

துர்க்கா துரந்தரி கலாநிதி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. J.P
(தலைவர்)

திரு. சி. அருளானந்தசிவம்
[உப-தலைவர்]

திரு. ச. ஆறுமுகநாதன்
[உப-தலைவர்]

Dr. தி. திவாகரன்
[பொதுச் செயலாளர்]

திரு. நா. தவநாதன்
[இணைச் செயலாளர்]

திரு. ஆறு. திருமுருகன்
[இணைச் செயலாளர்]

திரு. அ. சண்முகநாதன்
[பொருளாளர்]

திரு. சு. ஏழூர்நாயகம்
[உப-பொருளாளர்]

திரு. ந. செல்வநாயகம்

திரு. ச. விநாயகரத்தினம்

திரு. நா. தவமணிநாயகம்

திரு. மு. அருளையா

திரு. ச. கந்தையா

திரு. சு. முருகையா

திருமதி கலாதேவி பொன்னம்பலம். M.A

Dr. செ. சபாநடேசன்

திரு. சி. புஸ்பநாதன்
(கொழும்புப் பிரதிநிதி)

திரு. நா. சிவநாதன்
[இந்து இளைஞர் சங்க பிரதிநிதி]

உ

ஸ்ரீ துர்க்காதேவி துணை

# ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை

# ஆண்டறிக்கை – 2007

## 01-01-2007 தொடக்கம் 31-12-2007 வரை

**ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருள் துணை கொண்டு,**

எமது ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 2007ஆம் ஆண்டறிக்கையும் 31-12-2007இல் முடிவடைந்த நிதி வருடத்திற்கான கணக்காய்வு அறிக்கையினையும் எமது மதிப்பிற்குரிய ஆன்மீகத் தலைவி கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் இழப்பினாலும் கணக்காய்வு செய்வதில் ஏற்பட்ட தாமதத்தினாலும் இவ் அறிக்கைகளை காலந்தாழ்த்தி வெளியிட நேரிட்டதையிட்டு மனம் வருந்துகின்றோம்.

**நிர்வாகசபை :**

1966ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேவஸ்தான நிர்வாகசபை தொடர்ச்சியாக 41 வருடங்களாக சிறப்பாக இயங்கி வருகிறது. எமது பெருமதிப்பிற்குரிய துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இச்சபையின் தலைவராக 20-01-1977இல் பொறுப்பேற்று அவர் 15-06-2008இல் சிவபதம் அடைகின்றவரை இச்சபையினை கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் சிறப்பாக நிர்வகித்து வந்தார். அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவரின் இறுதி அஞ்சலி பற்றிய விபரம் 2008ஆம் ஆண்டறிக்கையில் இடம்பெறுகின்றது குறிப்பிடத்தக்கது.

**நிர்வாகசபையில் ஏற்பட்ட மாற்றங்கள் :**

20-01-2007இல் நிர்வாகசபைக் கூட்டத் தீர்மானப்படி மல்லாகத்தைச் சேர்ந்தவரும், பதில் நீதவானும், சட்டத்தரணியும், உபதலைவரில் ஒருவருமாகிய திரு. மு. சபாநாதன் அவர்கள் தாமாகவே உபதலைவர் பதவியிலிருந்தும், உறுப்பினர் பதவி

யிலிருந்தும் விலகிய காரணத்தால் உபதலைவர் பதவிக்கு திரு. சரவணமுத்து ஆறுமுகநாதன் அவர்களும், உறுப்பினர் பதவிக்கு வைத்திய கலாநிதி செல்லப்பா சபாநடேசனும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இவ்வருடம் 12 நிர்வாகசபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

**சிவாச்சாரியார்கள் அந்தணப்பெருமக்களின் பணிகள் :**

எமது தேவஸ்தானத்தின் நித்திய நைமித்திய கிரியைகள் நேர ஒழுங்கின்படி சிறப்பாக நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்கிய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள், கிரியைகளில் அவருக்கு உதவி புரிகின்ற பிரம்மஸ்ரீ சு. சுந்தரராஜசர்மா, இ. பிரசன்னவதனசர்மா, சி. கணேசமூர்த்திசர்மா மற்றும் தேவஸ்தானத்தில் நடைபெறும் முக்கிய விழாக்கள், மற்றும் விஷேட உற்சவங்களில் சர்வசாதகராக கடமையாற்றிவரும் சிவஸ்ரீ சு. செந்தில்ராஜக் குருக்களுக்கும் மற்றும் விஷேட விழாக்களிலும் வைபவங்களிலும் கலந்துகொண்டு சமயாசமயப் பணிகளை சிறப்புற ஆற்றும் சிவஸ்ரீ சோ. ரஜிதகிரிதரக் குருக்கள், பிரம்மஸ்ரீ ந. இராமச்சந்திரசர்மா ஆகியோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. மேலும் களஞ்சியத்திற்குப் பொறுப்பாக இருந்து நித்திய நைமித்திய கிரியைகள், அபிஷேகங்கள் செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு வழங்கும் சிவத்திரு சி. ஈஸ்வரதாஸ் ஐயாவுக்கும் நன்றி உரித்தாகுக.

**தேவஸ்தான உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் சேவை :**

தேவஸ்தான நிதி நிர்வாகம் செம்மையாக நடைபெற தேவஸ்தானத்தில் தங்கியிருந்து முழுநேரப்பணியாளராக பூரண ஒத்துழைப்பு தருகின்ற திரு. கா. சிவபாலன் மற்றும் திருவாளர்கள் வி. சிவகுமாரன், வி. நடராசா, வி. கமலநாதன், திருமதி உ. மஞ்சுளா, ஆகியோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

தேவஸ்தானக் கணக்குகளை உரிய பேரேட்டில் பதிந்து மாதாந்தம் வரவு, செலவு அறிக்கையினை தயாரிப்பதற்கு உதவிபுரிகின்ற செல்வி ச. ரேவதிக்கும் எமது நன்றி உரித்தாகுக.

மேலும் ஆலய உள்வீதி சுத்தம் களஞ்சியப் பணிகளிலும் உதவி புரிகின்ற திருவாளர்கள் ந. பரமேஸ்வரன், வை. கணேசானந்தன்,

இ. குணசேகரம், பொ. பாலகுமார் ஆகியோருக்கும் ஆலய வெளி வீதிகள் துப்பரவு, தோட்டம் கோசாலை பராமரிப்பு ஆகியவற்றை செவ்வனே ஆற்றிவரும் திருவாளர்கள் பொ. தியாகராசா, த. கந்தையா, சி. நாகர், சி. சண்முகானந்தன், வே. பாக்கியமுத்து, நீ. நாகமுத்து ஆகியோருக்கும் யாத்திரிகர் விடுதியில் கடமை யாற்றும் திரு. த. சிவராசா அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. 23-03-2007ஆம் திகதி நிர்வாகசபைக் கூட்டத் தீர்மானப்படி திரு. பொ. பாலகுமார் தாமாகவே பதவியிலிருந்து விலகியதை சபை ஏற்றுக் கொண்டது.

**தேவஸ்தானத்தில் நடைபெற்ற விஷேட விழாக்கள் :**

| | | |
|---|---|---|
| தைப்பொங்கல் விழா | 12-01-2007 | திங்கட்கிழமை |
| அபிராமிப்பட்டர் விழா | 18-01-2007 | வியாழக்கிழமை |
| மகாசிவராத்திரி விழா | 16-02-2007 | வெள்ளிக்கிழமை |
| இலட்சார்ச்சனை விழா | 21-02-2007<br>02-03-2007 | புதன்கிழமை<br>வெள்ளிக்கிழமை |
| வருடாந்தப் பொங்கல் விழா | 10-04-2007 | செவ்வாய்க்கிழமை |
| சர்வஜித் வருடப்பிறப்பு | 14-04-2007 | சனிக்கிழமை |
| ஆடிச்செவ்வாய் விழாக்கள் | 17-07-2007, 24-07-2007, 31-07-2007, 07-08-2007, 14-08-2007 | |
| ஆடிப்பூரத்திருவிழா | 15-08-2007 | புதன்கிழமை |
| நவராத்திரிவிழா | 12-10-2007 | வெள்ளிக்கிழமை |
| விஜயதசமி விழா | 21-10-2007 | ஞாயிற்றுக்கிழமை |
| கேதாரகௌரி விரத ஆரம்பம் | 21-10-2007 | ஞாயிற்றுக்கிழமை |
| கேதாரகௌரி விரத பூர்த்தி | 09-11-2007 | வெள்ளிக்கிழமை |
| குமாராலயதீபம்<br>சர்வாலய தீபம்<br>திருவிளக்குப் பூசை | 24-11-2007 | சனிக்கிழமை |
| திருவெம்பாவை ஆரம்பம் | 15-12-2007 | சனிக்கிழமை |
| திருவெம்பாவை பூர்த்தி | 24-12-2007 | திங்கட்கிழமை |

**வருடாந்த மகோற்சவம் - 2007**

இவ்வருடம் வருடாந்த மகோற்சவப் பெருவிழா 16-08-2007 வியாழக்கிழமை ஆரம்பமாகி 28-08-2007 செவ்வாய்க்கிழமை வைரவர் பொங்கலுடன் பூர்த்தியடைந்தது. இவ்வருடம் சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் பிரதான சிவாச்சாரியாராக கடமையாற்றி மகோற்சவத்தை சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் நிறைவேற்றியுள்ளார். இம்முறை கொடியேற்ற சங்கற்பத்தை நிர்வாகசபையின் சார்பில் உபபொருளாளர் திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

**திருமகள் அழுத்தகப் பணிகள் :**

எமது துர்க்காதேவி தேவஸ்தானத்தால் 01-04-1989இல் கொள்வனவு செய்யப்பட்ட சுன்னாகத்தில் இயங்கிவந்த திருமகள் அழுத்தகம் நாட்டில் ஏற்பட்ட வன்செயல் இடம்பெயர்வு காரணமாக பிற வேலைகள் குறைவாகவே கிடைக்கின்றன. மேலும் தற்பொழுது 09-06-2006 தொடக்கம் தேவஸ்தான வளாகத்தில் இயங்கி வருகின்றது.

தற்போது பெரும்பாலும் அச்சுப்பதிவுகள் கணணி மயப் படுத்தப்பட்ட காரணத்தாலும் நாட்டில் பல இடங்களில் ஒவ்செற் கணனி பொறிமுறை அச்சுப்பதிவுகள் இயங்கி வருகின்ற படியாலும் எமது அச்சகத்தில் மட்டுப்படுத்தப் பட்ட வகையில் குறிப்பாக தேவஸ்தான, மகளிர் இல்ல அச்சுவேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் "அருள் ஒளி" மாதாந்த சமய சஞ்சிகை இவ் அச்சகத்தில் சிறப்புற அச்சிட்டுத் தரப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

**மானங்கலட்டி காணி அன்பளிப்பு :**

25-03-2007 நிர்வாகசபைக் கூட்டத் தீர்மானப்படி இல 10, cinstein street, winston Holls, Nsw, 2153 அவுஸ்ரேலியாவில் தற்போது வசிக்கும் திருமதி. பூ. இராசேந்திரம் அவர்கள் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்கு பின்புறமாகவுள்ள "மானங்கலட்டி" காணியை நன்கொடையாக வழங்கியுள்ளார். இது யாழ்ப்பாணம் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் 209 பக்கத்தில்

பதியப்பட்டுள்ளது. மகோற்சவ தீர்த்த உற்சவ உபயகாரர்களான இவர்கள் காணியின் வருமானம் உபயச் செலவுக்கு பயன்படும் நோக்கமாக அன்பளிப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

**அறக்கட்டளை நிதி :**

2007ஆம் ஆண்டு எமது தேவஸ்தானத்திற்கு அறக்கட்டளை நிதியாக ரூபா 540000/- கிடைக்கப்பெற்றது.

1. 25-03-2007 நிர்வாகசபைக்கூட்டத் தீர்மானப்படி இல3, Defonska Place, Colombo-5 இல் வசிக்கும் காது, மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி திரு. சு. மகேந்திரன் அன்பளிப்பு செய்த ரூபா 150000/= வை இலங்கை வங்கி, சுன்னாகத்தில் நிலையான வைப்பிலிட்டு முதிர்வின்போது வருட வட்டியை பங்குனி உத்தர நாளன்று அன்னதானம் வழங்க பயன்படுத்தும் வகையில் சான்றிதழ் பெறப்பட்டது. சான்றிதழ் இல, 2/0042/111/43956.

2. 25-03-2007 நிர்வாகசபை தீர்மானப்படி ஏழாம் கட்டை, மல்லாகத்தில் வசிக்கும் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் அன்பளிப்புச் செய்த ரூபா இரண்டு இலட்சத்தில் ரூபா ஐம்பதினாயிரத்தை அமரர் திரு. அ. சரணவமுத்து ஞாபகார்த்தமாக சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையானவைப்பிலிட்டு முதிர்வின்போது வருட வட்டியை ஆடிச்சோதி தினத்தன்று மகேஸ்வர பூசைக்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்ற வகையில் நிலையான வைப்புச் சான்றிதழ் பெறப்பட்டது. மீதி ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரத்தை அமரர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் நினைவாக சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பிலிட்டு முதிர்வின்போது வருட வட்டியை அமரர். சு. பாஸ்கரன் நினைவாக ஆண்டுதோறும் ஒக்டோபர் 26ஆம் திகதி அன்னதானம் வழங்கும் வகையில் நிலையான வைப்புச் சான்றிதழ் பெறப்பட்டது.

3. 27-05-2007 ஆம் திகதிய நிர்வாகசபைக் கூட்டத் தீர்மானப்படி சிவத்தமிழ்செல்வி அன்னையர் இல்லத்தில்

வாழ்ந்த காட்டடைப்பு வீதி காங்கேசன்துறையைச் சேர்ந்த அமரர் திருமதி இராஜேஸ்வரி பரமநாதன் நினைவாக அன்பளிப்பாகப் பெறப்பட்டது ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம் (190000/-) ரூபாவை இலங்கைவங்கி காங்கேசன்துறைக் கிளையில் நிலையான வைப்பிலிட்டு முதிர்வின்போது வருடவட்டியை அன்னார் நினைவாக யூன் 16ஆம் திகதி அன்னதானம் வழங்கும் வகையில் நிலையான வைப்புச் சான்றிதழ் பெறப்பட்டது. சான்றிதழ் இல, 639212.

**உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்களின் ஆதரவு :**

எமது தேவஸ்தானத்தில் நித்திய நைமித்திய பூசைகள் விழாக்கள் மற்றும் திருப்பணிகள், சமுதாய நலப்பணிகள், அன்னதானம் ஆகியன சிறப்பாக மேற்கொள்ள உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்கள், நலன் விரும்பிகள், அடியவர்கள், நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ , அல்லது வங்கி மூலமாகவோ தாராளமாக உதவி வருகின்றார்கள். இவ்வகையில் ஆதரவு வழங்கிவரும் அனைவருக்கும் எமது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வகையில் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட தொகையினை அன்பளிப்பாக வழங்கியவர்களின் விபரங்களைத் தருகின்றோம்.

| | |
|---|---|
| 1. திருமதி பாலாம்பிகை பாஸ்கரன், அன்னதானம். | 200000-00 FD |
| 2. Dr. A. மகேந்திரன், உபயம். | 150000-00 FD |
| 3. Dr. V. கருணாகரன், அன்பளிப்பு. | 100000-00 |
| 4. திருமதி N. கமலேஸ்வரி, அன்பளிப்பு . | 70680-41 |
| 5. திருமதி அனுராதை கேசவன், அன்பளிப்பு. | 55000-00 FD |
| 6. திருமதி சாரதா மனோகரன், அன்பளிப்பு. | 50000-00 |
| 7. திரு. N. மகேந்திரன், அன்பளிப்பு. | 520000-00 |
| 8. திரு. A. சிவபாதம், அன்பளிப்பு. | 500000-00 |
| 9. திரு. த. ஜெயக்குமார், மஹோற்சவ அன்னதானம். | 50000-00 |
| 10. S. பாலபுத்திரன், அன்பளிப்பு. | 50000-00 |
| 11. பா. கந்தையா, அன்பளிப்பு. | 52496-50 |

**புராணபடன நிகழ்வு :**

கொழும்புத்துறை தவமுனிவர், தவப்பெருந்திரு யோகர் சுவாமிகளின் வேண்டுகோளின்படி எமது தேவஸ்தானத்தில் 1958ஆம் ஆண்டு தொடக்கம் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் வருடந்தோறும் ஒன்று என்ற அடிப் படையில் படிக்கப்பெற்று பயன்கூறி வருவது குறிப்பிடத் தக்கது. இவ்வருடம் கந்தபுராணப் படிப்பு 23-05-2007 புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டு 25-07-2007 புதன்கிழமை பூர்த்திபெற்றது. பூர்த்தி விழாவில் பௌராணிகர்கள் அனைவரும் கௌரவிக் கப்பட்டு அன்று நடைபெற்ற மகேஸ்வரபூசையில் அடியவர்கள் யாவரும் பங்குபற்றினார்கள். புராணபடன நிகழ்வுச் செலவினை ஈடு செய்யும் வகையில் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில் ரூபா ஐந்து இலட்சம் நிலையான வைப்பில் இடப்பெற்று முதிர்வின் போது வருட வட்டியை இச்செலவிற்கு பயன்படுத்தப் படுகின்றது.

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் பணிகள் :**

கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர் சரியைத் தொண்டுகள் செய்து வருகின்றனர். வாரந்தோறும், மகோற்சவ காலங்கள் மற்றும் அனைத்து விழாக் காலங்களிலும் தங்கள் பணிகளைச் சிறப்பாக ஆற்றிவருகின்றனர். மேற்படி சங்கத்தின் பிரதிநிதியாக திரு. நா. சிவநாதன் அவர்கள் நிர்வாகசபை உறுப்பினராகப் பணியாற்றி வருகின்றார். சங்கத்தின் பணிகள் மேலும் உயர்வடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்னதானப் பணி :**

எங்கள் தேவஸ்தானத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களிலும், மஹோற்சவ தினங்களிலும் ஆலயத்திற்கு வருகைதருகின்ற அடியவர்களுக்கு அன்னதானம் ஒழுங்காக வழங்கப்பட்டு வருகின்றது. அன்னதானப் பணிக்கு தனது நேரத்தையும், பொருளையும் செலவு செய்து எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குகின்ற திரு. ச. ஆறுமுகநாதனின் சேவையைப்

பாராட்டுகின்றோம். அன்னதானப்பணி சிறப்புற முழு ஒத்தாசை புரிகின்ற நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர், பெண்கள் தொண்டர் சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள், சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லத்தினர், சமயோசித தொண்டர்கள் மற்றும் அன்னதானப் பணிக்கு பொருளாகவோ, பணமாகவோ ஆதரவு வழங்குகின்ற வர்த்தகப் பெருமக்கள், அன்பர்கள் யாவருக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்க பிரார்த்திப்பதோடு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் அறக்கொடை நிதியம் :**

அம்மையாரின் 82ஆவது பிறந்தநாளாகிய ஜனவரி 07ஆம் திகதியை முன்னிட்டு அறநிதிய வட்டிப் பணத்திலிருந்து வடமராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த வறிய மாணவர்கள் 110 பேருக்கு நிதியும், நான்கு புலமை சார்ந்த முதியோருக்கு கௌரவமும் வழங்கப்பட்டது. அத்துடன் பிறந்தநாளை முன்னிட்டு அம்பாளுக்கு அபிஷேகம், பிரார்த்தனையுடன் விழாவில் கலந்துகொண்ட அன்பர்களுக்கு மதியபோசனம் வழங்கலுடன் விழா சிறப்பாக நடைபெற்றது.

# நன்றி கூறுகின்றோம்

01. மதிப்பார்ந்த யாழ். அரசாங்க அதிபர் அவர்கள்.

02. வலி-வடக்கு பிரதேச செயலர் அவர்கள், தெல்லிப்பழை.
துர்க்காபுரம் கிராமசேவையாளர்கள்

03. காலத்துக்குக் காலம் அன்பளிப்புக்களை வழங்கி ஆதரவு தருகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள்.

04. அன்னதானம் வழங்குவதற்கு ஆதரவு தருகின்ற அறக் கொடையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள்.

05. சரியைத் தொண்டுகள் ஆற்றும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், பெண்கள் தொண்டர் சபையினர், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தினர்,

06. * இலங்கை வங்கிக் கிளைகள் - சுன்னாகம், பம்பலப்பிட்டி, காங்கேசன்துறை

* வர்த்தக வங்கிக் கிளைகள் - யாழ்ப்பாணம், சுன்னாகம்

* தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகள்- சுன்னாகம், யாழ்ப்பாணம், மானிப்பாய், திருநெல்வேலி, வெள்ளவத்தை.

* மக்கள் வங்கிக் கிளைகள் - காங்கேசன்துறை, சுன்னாகம்

* ஹற்றன் நஷனல் வங்கி - சுன்னாகம்

07. தேவஸ்தான சார்பில் வங்கி சம்பந்தமான விடயங்களையும் ஏனைய தேவஸ்தானக் கடமைகளையும உடனுக்குடன் நிறைவேற்றி தரும் நிர்வாகசபை உறுப்பினர் திரு. சி. புஸ்பநாதன்.

08. தேவஸ்தான திருப்பணி வேலைகளை நிறைவேற்றித் தருகின்ற திரு. ஆ. ஜனார்த்தனன்

09. தேவஸ்தான அன்னதானப் பணிகளுக்கு உதவி புரிகின்ற திரு. ச. ஆறுமுகநாதன், ச. விநாயகரத்தினம் ஆகியோர்

10. உதயன், வலம்புரி, தினக்குரல், தினகரன், வீரகேசரி நிறுவனத்தினர்

11. வருடந்தோறும் மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் ஒரு பகுதியை அழகுற

அச்சிட்டு அன்பளிப்பாக வழங்குகின்ற திரு. கு. அருளானந்தம் கொழும்பு அனுஷ் பிறிண்டேர்ஸ்

11. மல்லாகம் கிருபா போட்டோ நிறுவனம், சுன்னாகம் யோகா போட்டோ நிறுவனம், தெல்லிப்பழை நிக்கோன் நிறுவனம்

12. இலங்கை மின்சார சபை யாழ், சுன்னாகம் உத்தி யோகத்தர்கள்

13. தேவஸ்தான நீர், மின் வேலைகளை சீர்செய்து தரும் திரு. த. தயானந்தன் ஆகியோர்.

14. வலி–வடக்கு பிரதேச சபை, சுகாதாரப் பகுதி

15. தெல்லிப்பழை ப. நோ. கூட்டுறவுச் சங்கத் தலைவர், பணியாளர்கள்

16. யாழ். இலங்கை போக்குவரத்துச் சபையினர்

17. சிற்றூர்திச் சேவையாளர் சங்கத்தினர்

18. யாழ் பிராந்திய ரெலிகொம் நிறுவனத்தினர்

19. சிறந்தமுறையில் அச்சுப்பதிவுகளை ஆற்றிவருகின்ற திருமகள் அழுத்தகத்தினர்.

20. வருடாந்தக் கணக்காய்வினை நல்லபடி நிறைவேற்றித் தரும் செல்வேந்திரா நிறுவனத்தாருக்கும் முகாமையாளர் திருவாளர் சபாபதிப்பிள்ளை அவர்கட்கும் எமது நன்றிகள்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P
*தலைவர்*

திரு. அ. சண்முகநாதன்
*பொருளாளர்*

திரு. சு. ஏழூர்நாயகம்
*உப-பொருளாளர்*

திரு. நா. தவநாதன்
திரு. ஆறு. திருமுருகன்
*இணைச்செயலாளர்கள்*

வைத்தியகலாநிதி திரு. தி. திவாகரன்
*பொதுச் செயலாளர்*

தலைவர்,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.

அன்புடையீர்,

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 2007ஆம் வருடம் மார்கழி மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வினைப் பூர்த்தி செய்துள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்வதுடன் பின்வரும் விடயங்களை தங்கள் பார்வைக்காக சமர்ப்பிக்கின்றோம்.

**1. நிலையான சொத்து**

இவ்வருடம் நிலையான சொத்துக்கள் கணக்கில் எதுவித புதிய சொத்துக்களும் சேர்க்கப்படவில்லை என்பதுடன் எதுவித சொத்துக்களும் நீக்கப்படவில்லை. உபகரணம், தளபாடம், ஆகியவை மீள் பரிசீலனை செய்யப்பட்டு நீக்கவேண்டியவை இருப்பின் அவை நீக்கப்படுவதுடன் சேர்க்கப்படாதவை ஏதும் இருப்பின் அவற்றையும் சேர்த்து செம்மையாக்குதல் உசிதமான நடவடிக்கையாகும். பெறுமானத்தேய்வு ரூபா 794829-77 கணிப்பிடப்பட்டு மேற்படி கணக்கிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது.

**2. நிலையான வைப்புக்கள்:**

சென்ற வருட இறுதி மீதி ரூ. 13,220,105-89 **ஆகும். இவ்வருடம் பின்வரும் வைப்புகள் செய்யப்பட்டுள்ளன.**

| | | | |
|---|---|---|---|
| 1. வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம். | - | ரூ | 2,000,000-000 |
| 2. தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம். | - - | ரூ | 420,000-00 |
| 3. இலங்கை வங்கி, காங்கேசன்துறை. | - | ரூ | 690,000-00 |
| 4. ஹற்றன் நஷனல் வங்கி, சுன்னாகம். | - | ரூ | 1,000,000-00 |
| மொத்தம் | | ரூ | 4,110,000-00 |

இத்துடன் தன்னியக்க மீள் புதுப்பித்தலின் மீதான வட்டி ரூ. 309,534-73 ம் சேர்க்கப்பட்டு 31-12-2007இல் மீதி 17,639,640-62 ஆக உள்ளது. இதன் விபரம் குறிப்பு 02இல் காட்டப்பட்டுள்ளது.

**3. முதலீடு திருமகள் அழுத்தகம் :**

மேற்படி அழுத்தகத்திற்கு ரூ. 1,100,000-00 முதலீடு செய்யப் பட்டுள்ளதாக தொடர்ந்து கடந்த சில வருடங்களாக ஐந்தொகையில் காட்டப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பரிசீலனை செய்து முதலீட்டின் சாதக, பாதக நிலையை அறிந்து கொள்வது வரவேற்கத் தக்கதாகும்.

**4. வங்கி மீதி (நடைமுறைக் கணக்கு)**

இக்கணக்குகளில் அன்றாட நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக உள்ள பணம் நிலையான வைப்பிலோ அன்றேல் சேமிப்பு வைப்பிலோ முதலீடு செய்வது உசிதமான நடவடிக்கையாகும்.

**5. அறக்கட்டளை நிதி**

இவ்வருடம் மேற்படி நிதி செம்மையாக்கப்பட்டு சரியான மீதி சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.
நிதி நிலை மாற்றக் கூற்றில் இதன் விபரம் தரப்பட்டுள்ளது.
இவ்வருடம் ஏற்படுத்தப்பட்ட புதிய அறக்கட்டளை விபரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. Dr. சு. மகேந்திரன் – பங்குனி உத்தர அன்னதானம் | ரு | 150,000-00 |
| 2. திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் – அமரர் சு. ஸ்ரீபாஸ்கரன் நினைவு அன்னதானம் | ரு | 150,000-00 |
| 3. திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் – அமரர் அ. சரவணமுத்து நினைவு அன்னதானம் | ரு | 50,000-00 |
| 4. அமரர் திருமதி இராஜேஸ்வரி பரமானந்தம் – அன்னாரது நினைவு அன்னதானம் | ரு. | 190,000-00 |
| மொத்தம் - | ரு. | 540,000-00 |

**06. அன்பளிப்பு**

அன்பளிப்புகளில் சமூக நலப்பணிகளுக்காக செய்யப்பட்ட அன்பளிப்புகள் சமூக நலப்பணி என பிறிதாக உள்ள செலவில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் விபரம் குறிப்பு 07இல் காட்டப்பட்டுள்ளது.

**07. பொது**

வங்கி (நடைமுறைக்கணக்கு) ஏடு முறையாகப் பேணப்படாதது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை முறையாக பேணுவதுடன் மாதாந்தம் வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று தயாரிப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுவது உசிதமான நடவடிக்கையாகும்.

கணக்காய்வுப் பணியின்போது நிர்வாகம் தந்த ஒத்துழைப்புக்கு எமது நன்றியை தெரிவிப்பதுடன் தங்களுக்குத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் வேண்டிய ஒத்துழைப்பைத் தர தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றாம்.

நன்றி

திகதி: 22-08-2008
யாழ்ப்பாணம்

**S. Selvendra & Co**
*பட்டயக்கணக்காளர்*

**க. சபாபதிப்பிள்ளை**
*முகாமையாளர்*

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## 31-12-2007இல் உள்ளவாறான ஐந்தொகை

| விபரம் | கு.பு | தொகை | தொகை |
|---|---|---|---|
| **நடைமுறையில்லாச் சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் | 01 | 18,031,829-99 | |
| முதலீடு- திருமகள் அழுத்தகம் | | 1,100,000-00 | |
| நிலையான வைப்பு | 02 | 17,639,640-62 | |
| | | | 36,771,470-61 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| திருவாபரணங்கள் | 03 | 360,461-50 | |
| பித்தளைப் பொருட்கள் | | 43,033-00 | |
| சேமிப்பு வைப்புக்கள் | 04 | 16,075,870-78 | |
| வங்கி மீதி | 05 | 3,956,745-62 | |
| காசு மீதி | | 95,516-13 | 20,531-627-03 |
| | | | 57,303,097-64 |
| **நிதிகளும் பொறுப்புக்களும்** | | | |
| பொது நிதி | | | 47,882,758-80 |
| அறக்கட்டளை நிதி | | | 5,691,626-49 |
| ஒதுக்கு நிதி | | | 1,543,262-35 |
| கட்டிட நிதி | | | 2,185,450-00 |
| | | | 57,303,097-64 |

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் மேலே காட்டப்பட்டுள்ளன என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ........................................ அ. சண்முகநாதன் ....................

*தலைவர்* *தனாதிகாரி*

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 31-12-2007இல் உள்ள ஐந்தொகையும் 2007 ஆம் வருடத்துக்கான வருமானச் செலவுக் கணக்கும், பெறுவனவு கொடுப்பனவு கணக்கும், நிதிநிலை மாற்றக்கூற்றும் எம்மால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம்

**இவை கணக்கேடுகளுக்கு அமைவாக உள்ளன என்பதையும் இவற்றுக்குரிய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதுடன் அவை சரியான முறையில் உள்ளன என்பதையும் மேற்குறிப்பிட்ட கணக்குக் கூற்றுக்கள் தேவஸ்தானத்தின் நிதி நிலையையும் வருமானச் செலவினையும் சரியான முறையில் பிரதிபலிக்கின்றன என்பதையும் உறுதிப்படுத்து கின்றோம்.**

திகதி: 22-08-2008
யாழ்ப்பாணம்

**S. Selvendra & Co**
*பட்டயக்கணக்காளர்*

க. சபாபதிப்பிள்ளை
*முகாமையாளர்*

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
## 31-12-2007இல் முடிவுற்ற வருடத்துக்கான வருமானச் செலவுக் கணக்கு

| விபரம் | கு.பு | தொகை | தொகை |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| கோவில் தினசரிக்கருமங்கள் (பெ/கொ கணக்கின்படி) | | | 3,040,215-00 |
| மகோற்சவம் (பெ/கொ கணக்கின்படி) | | | 728,616-00 |
| அன்னதானம் (பெ/கொ கணக்கின்படி) | | | 3,382,781-50 |
| விஷேட உற்சவங்கள் (பெ/கொ கணக்கின்படி) | | | 995,624-00 |
| பெற்ற அன்பளிப்பு | | | 5,278,699-74 |
| உண்டியல் | | | 946,501-00 |
| திருமணம் – வரவு | | 902,000-00 | |
| திருமணம் - செலவு | | (480,512-00) | 421,488-00 |
| வாடகையும் மின் கட்டணமும் வரவு | | | 38,600-00 |
| திருப்பணி | | | 5000-00 |
| பெற்றவட்டி | 06 | | 1,733,314-53 |
| பனம்பொருள், தோட்ட விளைபொருள் விற்பனை | | | 37,160-00 |
| | | | 16,607,999-77 |

செலவுகள்

| | | |
|---|---|---|
| கோவில் தினசரிக் கருமங்கள் [பெ/கொ கணக்கின்படி] | | 1,274,274-50 |
| மகோற்சவம் [பெ/கொ கணக்கின்படி] | | 922,083-00 |
| அன்னதானம் [பெ/கொ கணக்கின்படி] | | 3,088,502-60 |
| விசேட உற்சவங்கள் [பெ/கொ கணக்கின்படி] | | 1,052,085-00 |
| நிர்வாகச் செலவுகள் [பெ/கொ கணக்கின்படி] | | 3,137,562-87 |
| விறகு எரிபொருள் | | 56,896-50 |
| அன்பளிப்பு | 07 | 239,000-00 |
| சமூக நலப்பணிகள் | 08 | 510,007-25 |
| சிவத்தமிழ்ச் செல்வி | | |
| பிறந்தநாள் அறநிதிய வட்டி | | 33,750-00 |
| அருள் ஒளி சஞ்சிகை செலவு | 222,600-00 | |
| அருள் ஒளி சஞ்சிகை விற்பனை | (164,000-00) | 58,600-00 |
| யாத்திரிகர் விடுதி செலவு | | 129,520-00 |
| புத்தகம், படம் அன்பளிப்பு | | 6,836-00 |
| தோட்ட வேலை | | 96,900-00 |
| நிறுத்திவைத்தல் வரி | | 17,597-07 |
| நானாவிதச் செலவு | | 25,029-00 |
| பெறுமானத் தேய்வு | | 794,829-77 (11,443,473-56) |
| செலவிலும் கூடிய வருமானம் | | 5,164,526-21 |

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
## 31-12-2007இல் முடிவுற்ற வருடத்துக்கான
## பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

| விபரம் | தொகை | தொகை | தொகை |
|---|---|---|---|
| **01-01-2007ல் மீதிகள்** | | | |
| நிலையான வைப்புகள் | | 13,220,105-89 | |
| சேமிப்பு வைப்புகள் | | 14,715,681-69 | |
| வங்கி மீதி | | 2,685,156-88 | |
| காசு மீதி | | 73,540-21 | 30,694,484-67 |
| **பெறுவனவுகள்** | | | |
| **கோவில் தினசரிக் கருமங்கள்** | | | |
| அர்ச்சனை | 1,451,715-00 | | |
| நூல் வழங்கல் | 137,235-00 | | |
| உபயம் | 1,378,950-00 | | |
| படம், இறுவெட்டு (CD) விற்பனை | 49,705-00 | | |
| புத்தக விற்பனை | 22,610-00 | 3,040,215-00 | |
| **மஹோற்சவம்** | | | |
| கொடியேற்றம் | 190,096-00 | | |
| உபயம் | 269,000-00 | | |
| பொதுவரவு | 269,520-00 | 728,616-00 | |
| **அன்னதானம்** | | | |
| துர்க்காதேவி தேவஸ்தானம் (வாராந்தம்) | 1,785,546-50 | | |
| துர்க்காதேவி தேவஸ்தானம் (மகோற்சவம்) | 550,385-00 | | |
| நல்லூர் , ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம (நல்லூர் மஹோற்சவம்) | 696,850-00 | | |
| நல்லூர், ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் (வெள்ளிக்கிழமை) | 350,000-00 | 3,382,781-50 | |

**விசேட உற்சவங்கள்**

| | | | |
|---|---|---|---|
| | | | 30,694,484-67 |
| இலட்சார்ச்சனை | 315,154-00 | | |
| கேதாரகௌரி நோன்பு | 367,800-00 | | |
| வரலட்சுமி நோன்பு | 113,370-00 | | |
| திருவெம்பாவை | 71,000-00 | | |
| நவராத்திரி | 98,000-00 | | |
| பங்குனிப் பொங்கல் | 10,500-00 | | |
| அபிராமிப்பட்டர் விழா | 15,000-00 | | |
| திருவிளக்குப் பூசை | 4,800-00 | 995,624-00 | |
| | | 8,147,236-50 | |
| அன்பளிப்பு வரவு | | 5,278,699-74 | |
| உண்டியல் | | 946,501-00 | |
| திருமண வரவு | | 902,000-00 | |
| பவுண் விற்பனை | | 573,932-50 | |
| அருள் ஒளி சஞ்சிகை விற்பனை | | 164,000-00 | |
| அறக்கட்டளை நிதி வரவு | | 540,000-00 | |
| வாடகையும் மின் கட்டணமும் வரவு | | 38,600-00 | |
| திருப்பணி வரவு | | 5,000-00 | |
| பனம்பொருள், தோட்ட விளைபொருள் விற்பனை | | 37,160-00 | |
| பெற்ற வட்டி : | | | |
| நிலையான வைப்பு வட்டி | 934,003-77 | | |
| சேமிப்பு வட்டி | 799,310-76 | 1,733,314-53 | 18,366,444-27 |
| | | | 49,060,928-94 |

**கொடுப்பனவுகள்**

**கோவில் தினசரிக் கருமங்கள்**

| | | |
|---|---|---|
| நித்திய பூசை | 82,002-00 | |
| உபயம் | 1,123,672-50 | |
| நூல் செலவு | 29,200-00 | |
| படம், இறுவட்டு (CD) செலவு | 39,400-00 | 1,274,274-50 |

**மஹோற்சவம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 35,645-00 | |
| உபயம் | 399,489-00 | |
| பொதுச் செலவு | 486,949-00 | 922,083-00 |

அன்னதானம்

49060928-94

| | | |
|---|---|---|
| துர்க்காதேவி தேவஸ்தானம் (வாராந்தம்) | 1,593,910-60 | |
| துர்க்காதேவி தேவஸ்தானம் (மகோற்சவம்) | 563,415-00 | |
| நல்லூர், ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் (நல்லூர் மஹோற்சவம்) | 719,960-00 | |
| நல்லூர், ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் (வெள்ளிக்கிழமை) | 211,217-00 | 3,088,502-560 |
| | | 5,284,860-10 |

விசேட உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| இலட்சார்ச்சனை | 268,786-00 | |
| கேதாரகௌரி நோன்பு | 220,040-00 | |
| வரலட்சுமி நோன்பு | 41,680-00 | |
| திருவெம்பாவை | 109,527-00 | |
| நவராத்திரி | 96,248-00 | |
| பங்குனிப் பொங்கல் | 24,550-00 | |
| அபிராமிப்பட்டர் விழா | 5,820-00 | |
| திருவிளக்குப் பூசை | 9,600-00 | |
| கந்தபுராணபடனம் பூர்த்தி | 20,730-00 | |
| மணவாளக் கோலம் | 78,214-00 | |
| வருடப் பிறப்பு | 77,000-00 | |
| தீபாவளி | 32,785-00 | |
| தைப்பொங்கல் | 50,825-00 | |
| ஆறுமுகநாவலர் குருபூசை | 16,280-00 | 1,052,085-00 |

நிர்வாகச் செலவுகள்

| | |
|---|---|
| சம்பளம் | 1,244,750-00 |
| சேம உதவு தொகை | 160,350-00 |
| விஷேட கொடுப்பனவு | 310,898-00 |
| திருத்தமும் பராமரிப்பும் | 78,100-00 |
| தபால் செலவு | 91,121-00 |
| சுற்றாடல் பராமரிப்பு | 34,930-00 |
| பிரயாணச் செலவு | 38,570-00 |

| | | | |
|---|---|---|---|
| பொது உபசாரம் | 113,830-00 | | |
| காகிதாதி, போட்டோ பிரதி | 48,207-00 | | |
| அச்சுக்கூலி | 132,320-00 | | |
| உள்ளகக் கணக்காய்வு | 12,000-00 | | |
| கணக்காய்வாளர் கட்டணம் | 35,000-00 | | |
| மின் இணைப்பும், நீர் இணைப்பும் | 57,062-00 | | |
| பாதுகாப்புச் சேவை | 151,650-00 | | |
| கூலி வேலை | 12,395-00 | | |
| மின் கட்டணம் | 581,150-91 | | |
| தொலைபேசிக் கட்டணம் | 26,000-00 | | |
| வங்கிக் கட்டணமும் பற்று வரியும் | 9,228-96 | 3,137,562-87 | |
| நிறுத்தி வைத்தல் வரி | | 17,597-07 | |
| பொது அன்பளிப்பு | | 623,600-00 | |
| விறகு எரிபொருள் | | 56,896-50 | |
| திருமணம் – செலவு | | 480,512-00 | |
| சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதிய வட்டி | | 33,750-00 | |
| அறநெறிப் பாடசாலை | | 39,377-25 | |
| சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகம் | | 86,030-00 | |
| அருள்ஒளி சஞ்சிகை செலவு | | 222,600-00 | |
| யாத்திரிகர் விடுதி | | 129,520-00 | |
| புத்தகம் படம் அன்பளிப்பு | | 6,836-00 | |
| தோட்டவேலை | | 96,900-00 | |
| நானாவிதச் செலவு | | 25,029-00 | (11,293,155-79) |
| | | | 37,767,773-15 |

**31-12-2007இல் மீதிகள்**

| | |
|---|---|
| நிலையான வைப்பு | 17,639,640-62 |
| சேமிப்பு வைப்புக்கள் | 16,075,870-78 |
| வங்கி மீதி | 3,956,745-62 |
| காசு மீதி | 95,516-13 |
| | 37,767,773-15 |

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

## நிதி நிலை மாற்றக்கூற்று

| விபரம் | பொது நிதி | அறக் நிதி | ஒதுக்கு நிதி | கட்டிட நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 01-01-2006இல் மீதி | 41,025,525-83 | 2,776,600-00 | 1,543,262-35 | 2,185,450-35 | 47,530,838-18 |
| 2006ஆம் வருட பவுண் அன்பளிப்பு | 484,820-00 | | | | 484,820-00 |
| 2006ஆம் வருடம் செலவிலும் கூடிய வருமானம் | 1,537,375-75 | | | | 1,537,375-75 |
| வட்டி வரவு | | 850,000-00 | | | 850,000-00 |
| 2006ஆம் வருட அறக்கட்டளை | | 570,000-00 | | | 570,000-00 |
| 31-12-2006 இல் மீதி | 43,047,721-58 | 4,196,600-00 | 1,543,262-35 | 2,185,450-00 | 50,973,033-93 |
| 2007ஆம் வருட பவுண் அன்பளிப்பு | 625,537-50 | | | | 625,537-50 |
| 2007ஆம் வருட செலவிலும் கூடிய வருமானம் | 5,164,526-21 | | | | 5,164,526-21 |
| 2007ஆம் வருட அறக்கட்டளை | | 540,000-00 | | | 540,000-00 |
| அறக்கட்டளை மீதி செம்மையாக்கல் | (955,026-49) | 955,026-49 | | | |
| 31-12-2007 இல் மீதி | 47,882,758-80 | 5,691,62649 | 1,543,262-35 | 2,185,450-00 | 57,303,097-64 |

குறிப்பு -2. நிலையான வைப்புக்கள்

| விபரம் | | 01-01-2007இல் மீதி | இவ்வருட வைப்பு | தன்னியக்க மீள் புதுப்பித்தலின் மீதான வட்டி | 31-12-2007இல் மீதி |
|---|---|---|---|---|---|
| வர்த்தக வங்கி | யாழ்ப்பாணம் | 5,471,995-57 | 2,000,000-00 | 177,052-44 | 7649048-01 |
| | சுன்னாகம் | 387,203-82 | | 20,328-79 | 407,532-61 |
| தேசிய சேமிப்பு வங்கி | யாழ்ப்பாணம் | 1,372,200-00 | | | 1,372,200-00 |
| | சுன்னாகம் | 3,813,706-50 | 420,000-00 | 112,153-50 | 4,345,860-00 |
| | வெள்ளவத்தை | 150,000-00 | | | 150,000-00 |
| இலங்கை வங்கி | சுன்னாகம் | 1,425,000-00 | | | 1,425,000-00 |
| | பம்பலப்பிட்டி | 400,000-00 | | | 400,000-00 |
| | காங்கேசன்துறை | | 690,000-00 | | 690,000-00 |
| ஹற்றன் நஷனல் வங்கி | சுன்னாகம் | 200,000-00 | 1,000,000-00 | | 1,200,000-00 |
| | | 13,320,105-89 | 4,110,000-00 | 309,534-73 | 17,639,640-62 |

## குறிப்பு –4¹ சேமிப்பு வைப்புக்கள்

| விபரம் | | கணக்கு இல | 1-01-2007இல் மீதி | வைப்பு / மீளெடுப்பு | வட்டி | நிறுத்தி வைத்தல் வரி / பற்றுவரி | 31-12-07இல் மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி | சுன்னாகம் | 1-0072-01-8054-8 | 1,831,566-87 | | 93,703-70 | | 1,925,270-57 |
| | யாழ்ப்பாணம் | 1-0006-02-7225-6 | 1,287,988-45 | 26,875-50 | 63,631-22 | | 1,378,495-17 |
| | மானிப்பாய் | 1-0107-01-0126-5 | 121,290-06 | | 6,202-35 | | 127,492-41 |
| | திருநெல்வேலி | 1-0108-01-0250-4 | 652,043-16 | | 33,358-15 | | 685,401-31 |
| | வெள்ளவத்தை | 1-0070-01-9628-2 | 1,603,743-27 | | 80,953-51 | | 1,684,696-78 |
| இலங்கை வங்கி | சுன்னாகம் | 7481713 | 2,951,215-63 | | 235,999-20 | | 3,187,214-83 |
| | பம்பலப்பிட்டி | 778224 | 1,703,916-82 | | 91,531-63 | 6,194-25 | 1,789,254-20 |
| | காங்கேசன்துறை | 7577754 | | 1,100,000-00 | 16,650-00 | | 1,116,650-00 |
| ஹட்டன் நஷனல் வங்கி | சுன்னாகம் | 02-0072901-4 | 1,366,580-27 | 407,599-90 | 67,253-00 | 400-00 | 1,841,033-17 |
| வர்த்தக வங்கி | யாழ்ப்பாணம் | 8600923701 | 3,147,947-16 | (1,000,000-00)<br>45,000-00 | 110,028-00 | 11,002-82<br>1,000-00 | 2,290,972-34 |
| | | | | | | | |
| | | | | | | | |

## குறிப்பு – 5. வங்கி மீதி

| விபரம் | 01-01-2007இல் இல் | வைப்பு | நிலையான வைப்பு வட்டி | மீளெடுப்பு | பற்றுவரியும் வங்கிக் கட்டணமும் | 31-12-2007 மீதி |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி சுன்னாகம் க/கு இல 07470940 | 1,037,129-83 | 3,389,352-51 | 115,962-50 | 3,582,982-91 | 3,618-08 | 955,843-85 |
| இலங்கை வங்கி பம்பலப்பிட்டி க/கு இல 0718488 | 507,372-72 | 918,276-15 | 43,853-42 | 760,024-50 | 1,533-34 | 707,944-45 |
| இலங்கை வங்கி காங்கேசன்துறை க/கு இல 07573273 | | 841,507-50 | | 190,000-00 | 950-00 | 650,557-50 |
| வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் க/கு இல. 1060012692 | 681,856-04 | 755,088-00 | 401,554-49 | 1,278,750-00 | 1,832-50 | 557,916-03 |
| வர்த்தக வங்கி சுன்னாகம் க/கு இல 110700214 | 458,798-29 | 902,921-91 | 18,098-63 | 295,040-00 | 295-04 | 1,084,483-79 |
| | 2,685,156-88 | 6,807,146-07 | 579,469-04 | 6,106,797-41 | 8,228-96 | 3,956,745-62 |

**பெற்ற வட்டி**

**நிலையான வைப்பு வட்டி**

| | | | |
|---|---|---|---|
| வங்கி நடைமுறைக் கணக்குகளில் வைப்பு செய்யப்பட்டது. (குறிப்பு – 5) | – | 579,469-04 | |
| வர்த்தகவங்கி சேமிப்புக் கணக்கு இல. 8600923701இல் வைப்பு | – | 45,000-00 | |
| தன்னியக்க மீள் புதுப்பித்தலின் மீதான வட்டி (குறிப்பு – 2) | – | 309,534-73 | 934,003-77 |
| சேமிப்பு வைப்பு வட்டி (குறிப்பு – 4) | | 799,310-76 | |
| **மொத்தம்** | – | | 1,733,314-53 |

## குறிப்பு - 07. அன்பளிப்பு

| ஆலயங்கள் | தொகை | |
|---|---|---|
| கீரிமலை நகுலேஸ்வரர் மகா சிவராத்திரி | 15,000-00 | |
| மாவை முருகன் வருடாந்த உற்சவ அன்னதானம் | 15,000-00 | |
| இந்து சமயப் பேரவை ஸ்ரீ நடராசர் ஆலய கும்பாபிஷேகம் | 10,000-00 | |
| காசி விநாயகர் மகோற்சவம் | 10,000-00 | |
| சுன்னாகம் மயிலணி விசாலாட்சி அம்பாள் மகோற்சவம் | 10,000-00 | |
| பொலிகண்டி கந்தவனக் கடவை வேலாயுத சுவாமி கோயில் மகோற்சவம் | 10,000-00 | |
| தெல்லிப்பழை தோதரவை அலங்கார உற்சவம் | 10,000-00 | |
| தெல்லிப்பழை குருநாதர் சுவாமி கோயில் அலங்கார உற்சவம் | 10,000-00 | |
| தெல்லிப்பழை குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோவில் மகோற்சவம் | 10,000-00 | |
| கீரிமலை நகுலேஸ்வரர் ஆடி அமாவாசை | 10,000-00 | |
| தெல்லிப்பழை பன்னாலை கற்பக விநாயகர் மகோற்சவம் | 10,000-00 | |
| பிற ஆலயங்கள் | 35,000-00 | 155,000-00 |
| திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா | | 37,000-00 |
| பொது நிறுவனங்களுக்கான அன்பளிப்பு | | 47,000-00 |
| | | 239,000-00 |

## குறிப்பு - 08. சமூக நலப்பணிகள்

அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| வறிய மாணவர்களின் கல்வி | 103,000-00 | |
| கஷ்ட நிவாரணம் | 37,400-00 | |
| நோயாளருக்கான மருத்துவ உதவி | 59,550-00 | |
| புலன் வலுவிழந்தோர் | 5,400-00 | |
| பாடசாலை விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு விழா | 159,250-00 | |
| சஞ்சிகை முதற் பிரதி | 10,000-00 | 374,600-00 |
| அமரர் வை. கணேசானந்தனின் மறைவின்போது உதவி | | 10,000-00 |
| அறிநெறிப்பாடசாலை | | 39,377-25 |
| சிவத்தமிழ்ச் செல்வி ஆய்வு நூலகம் | | 86,030-00 |
| | | 510,007-25 |

தலைவர்,
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் பிறந்ததின அறநிதியம்,
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

அன்புடையீர்,

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்ததின அறநிதியத்தின் 2007ஆம் வருடம் மார்கழி மாதம் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான கணக்காய்வினைப் பூர்த்திசெய்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் பின்வரும் விடயங்களை தங்கள் பார்வைக்காக சமர்ப்பிக்கின்றோம்.

01. நிலையான வைப்பு:

இவ்வருடம் ரூபா 2,000,000-00 புதிதாக வைப்பிலிடப் பட்டுள்ளது. அத்துடன் தன்னியக்க மீள் புதுப்பித்தலின் மீதான வட்டி ரூ. 55,204-00 உம் சேர்க்கப்பட்டு தற்போதைய மீதி ரூ. 3,505,204-00 ஆக உள்ளது. குறிப்பு 01இல் முழு விபரமும் தரப்பட்டுள்ளது.

**02. சேமிப்பு வைப்பு :**

மேற்படி வைப்பிலிருந்து ரூபா 2,000,000-00 மீளப் பெறப்பட்டு நிலையான வைப்பில் இடப்பட்டுள்ளது இது தவிர ரூ.300,000-00 அறநிதிய வைபவத்துக்காக மீளப் பெறப் பட்டுள்ளதுடன் செலவு செய்த பின் மீதிப்பணம் திரும்பவும் வைப்பிலிடப்பட்டுள்ளது. நிலையான வைப்பிலிருந்து பெறப்பட்ட வட்டி ரூ. 135,000-00 யாழ். தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. சேமிப்பு வைப்புக்கான வட்டியாக ரூ. 90,524-62 கிடைக்கப்பெற்றுள்ளது. முழு விபரமும் குறிப்பு 02இல் தரப்பட்டுள்ளது.

3. அறநிதி :

அறிநிதியத்திற்காக கிடைக்கப்பெற்ற கல்விநிதி அன்பளிப்பு ரூ. 200,000-00 மேற்படி நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வருடம் வடமராட்சி வலயக் கல்வி நிதிக்காக செலவு செய்யப்பட்ட அறக்கொடை ரூ.220,000-00 அறநிதியத்திலிருந்து கழித்துக் காட்டப்பட்டுள்ளது.

04. அன்பளிப்பு :

அன்பளிப்பு வரவுச் சிட்டை இல. 343 தொடக்கம் 417 வரை எம்மால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

05. தேவஸ்தான அறநிதிய வட்டி :

2007ஆம் வருடத்துக்குரிய தேவஸ்தான அறநிதிய வட்டி ரூ. 33,750-00 2008ஆம் வருட பிறந்தநாள் அறநிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

திகதி: 25-08-2008 — **S. Selvendra & Co**

யாழ்ப்பாணம் — பட்டயக்கணக்காளர்

க. சபாபதிப்பிள்ளை
முகாமையாளர்

## சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்ததின அறநிதியம் துர்க்காபுரம், தெல்லிப்பழை 31-12-2007இல் உள்ளவாறான ஐந்தொகை

| விபரம் | குறிப்பு | தொகை | தொகை |
|---|---|---|---|
| **சொத்துக்கள் :** | | | |
| **நடைமுறையில்லாச் சொத்துக்கள்** | | | |
| நிலையான வைப்பு | 01 | | 3,505,204-00 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | 02 | | 972,423-49 |
| | | | 4,477,627-49 |
| **நிதிகள் :** | | | |
| பொது நிதி | | | |
| 01-01-2007இல் மீதி | | 4,121,086-58 | |
| இவ்வருடம் கிடைத்த மாணவர் கல்வி நிதி அன்பளிப்பு | | 200,000-00 | |
| இவ்வருடம் செலவிலும் கூடிய வருமானம் | | 376,540-91 | |
| | | 4,697,627-49 | |
| **இவ்வருட அறக்கொடை :** | | | |
| வடமராட்சி கல்வி வலய கல்வி நிதி | | (220,000-00) | 4,477,627-49 |

மேற்குறிப்பிட்டுள்ள நிதியத்தின் நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளது என உறுதிப்படுத்து கின்றோம்.

| ஆறு. திருமுருகன் | அ. சண்முகநாதன் |
|---|---|
| தலைவர் | தனாதிகாரி |

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்ததின அறநிதியத்திற்கான 31-12-2007இல் உள்ளவாறான ஐந்தொகையும், 2007ஆம் வருடத்துக்கான வருமானச் செலவுக் கணக்கும், பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கும் எம்மால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. இவை கணக்கேடுகளுக்கு அமைவாக உள்ளன என்பதையும் இவற்றிற்குரிய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன என்பதையும் மேற்குறிப்பிட்ட நிதிக் கூற்றுக்கள் பிறந்தநாள் அறநிதியத்தின் நிதி நிலமைகளையும் வருமானச் செலவுகளையும் சரியான முறையில் பிரதிபலிக்கின்றன என்பதையும் உறுதிப்படுத்து கின்றோம்.

| திகதி: 25-08-2008 | S. Selvendra & Co |
|---|---|
| யாழ்ப்பாணம் | பட்டயக்கணக்காளர் |

க. சபாபதிப்பிள்ளை
முகாமையாளர்

## சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்ததின அறநிதியம் துர்க்காபுரம், தெல்லிப்பழை 31-12-2007இல் முடிவுற்ற வருடத்துக்கான

## வருமானச் செலவுக் கணக்கு

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| **வருமானம்** | | |
| அன்பளிப்பு | | 174,173-29 |
| நிலையான வைப்பு வட்டி | | 190,204-00 |
| சேமிப்பு வைப்பு வட்டி | | 90,524-62 |
| | | 454,901-91 |
| **செலவுகள் :** | | |
| அபிஷேகம், தெட்சணை | 6,500-00 | |
| மதிய உணவுச் செலவு | 49,816-00 | |
| அன்பளிப்பு– நல்லை ஆதீன சுவாமிகள் | 1,000-00 | |
| நால்வர் கௌரவம் | 1,950-00 | |
| பிரயாணச் செலவு | 1,500-00 | |
| புகைப்படச் செலவு | 12,595-00 | |
| விஞ்ஞாபன அச்சுக்கூலி | 950-00 | |

| | | |
|---|---|---|
| பூமாலை | 750-00 | |
| ஒலிபெருக்கி சேவை | 1,000-00 | |
| பற்றுவரி | 2,300-00 | (78,361-00) |
| செலவிலும் கூடிய வருமானம் | | 376,540-91 |

## சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்ததின அறநிதியம் துர்க்காபுரம், தெல்லிப்பழை 31-12-2007இல் முடிவுற்ற வருடத்துக்கான பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| **01-01-2007இல் மீதிகள்** | | |
| **நிலையான வைப்புகள்** | | 1,450,000-00 |
| **சேமிப்பு வைப்புகள்** | | 2,622,186-58 |
| **காசு மீதி** | | 48,900-00 |
| | | 4,121,086-58 |
| **பெறுவனவுகள்** | | |
| பெற்ற அன்பளிப்பு | 174,173-29 | |
| மாணவர் கல்வி நிதி அன்பளிப்பு | 200,000-00 | |
| நிலையான வைப்பு வட்டி | 190,204-00 | |
| சேமிப்பு வைப்பு வட்டி | 90,524-62 | 654,901-91 |
| | | 4,775,988-49 |
| கொடுப்பனவுகள் | | |
| அபிஷேகம், தெட்சணை | 6,500-00 | |
| வடமராட்சி வலயக் கல்வி நிதி | 220,000-00 | |
| மதிய உணவுச் செலவு | 49,816-00 | |
| அன்பளிப்பு – நல்லை ஆதீன சுவாமிகள் | 1,000-00 | |
| நால்வர் கௌரவம் | 1,950-00 | |
| பிரயாணச் செலவு | 1,500-00 | |
| புகைப்படச் செலவு | 12,595-00 | |
| விஞ்ஞாபன அச்சுக்கூலி | 950-00 | |
| பூமாலை | 750-00 | |
| ஒலிபெருக்கி சேவை | 1,000-00 | |
| பற்றுவரி | 2,300-00 | 298,361-00 |
| | | 4,477,627-49 |
| **31-12-2007இல் மீதிகள்** | | |
| **நிலையான வைப்பு** | | 3,505,204-00 |
| **சேமிப்பு வைப்பு** | | 972,423-49 |
| | | 4,477,627-49 |

குறிப்பு – 1 நிலையான வைப்பு

| வங்கியின் பெயர் | | கணக்கு இல | 01-01-2007ல் மீதி | இவ்வருட வைப்பு | தன்னியக்க மீள் புதுப்பித்தபின் மீதான வட்டி | 31-12-2007ல் மீதி |
|---|---|---|---|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி | யாழ்ப்பாணம் | 2-0006-03-9245-6 | 150,000-00 | | | 150,000-00 |
| | | 2-0006-04-1818-8 | 1,000,000-00 | | | 1,000,000-00 |
| | | 2-0006-04-1543-0 | 200,000-00 | | | 200,000-00 |
| | | 2-0006-04-7046-5 | 100,000-00 | | 55,204-00 | 155,204-00 |
| | | 2-0006-14-0540-3 | | 500,000-00 | | 500,000-00 |
| | | 2-0006-14-0541-1 | | 500,000-00 | | 500,000-00 |
| | சுன்னாகம் | 2-0072-11-5545-8 | | 500,000-00 | | 500,000-00 |
| | | 2-0072-11-5546-6 | | 500,000-00 | | 500,000-00 |
| மொத்தம் | | | 1,450,000-00 | 2,000,000-00 | 55,204-00 | 3,505,204-00 |

குறிப்பு –2. சேமிப்பு வைப்புக்கள்

| வங்கியின் பெயர் | | கணக்கு இல | 01–01–2007ல் மீதி | வைப்பு | மீளெடுப்பு | வட்டி | பற்றுவரி | 31–12–2007ல் மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி | யாழ்ப்பாணம் | 1-0006-02-7248-5 | 1,160,775-13 | 427,012-29 | 1,200,000-00 | 41,988-57<br>*135,000-00 | 1,200-00 | 563,575-99 |
| | சுன்னாகம் | 1-0072-02-0916-3 | 1,461,411-45 | | 1,100,000-00 | 48,536-05 | 1,100-00 | 408,847-50 |
| மொத்தம் | | | 2,622,186-58 | 427,012-29 | 2,300,00-00 | 90,524-62<br>*135,000-00 | 2,300-00 | 972,423-49 |

* நிலையான வைப்பு வட்டி

### தேவஸ்தான குருமார், பணியாளர்கள்

சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் (சிவாச்சாரியார்)
சிவஸ்ரீ சு. செந்தில்ராஜக் குருக்கள் (சிவாச்சாரியார்)
பிரம்மஸ்ரீ சு. சுந்தரராஜசர்மா
பிரம்மஸ்ரீ கி. கணேசமூர்த்திசர்மா
பிரம்மஸ்ரீ இ. பிரசன்னவதனசர்மா
சிவத்திரு சி. ஈஸ்வரதாஸ் ஐயா

### அலுவலகப் பணியாளர்கள்

திரு. கா. சிவபாலன்
செல்வி ச. ரேவதி
திருமதி உதயகுமார் மஞ்சுளா
திரு. வ. நடராஜா
திரு. வி. சிவகுமாரன்

### பணியாளர்கள்

திரு. ந. பரமேஸ்வரன்
திரு. சி. சண்முகானந்தம்
திரு. த. கந்தையா
திரு. பொ. தியாகராசா
திரு. த. சிவராசா
திரு. சி. நாகர்
திரு. வ. குணசேகரம்
திரு. க. கிருஸ்ணகுமார்
திரு. வ. கந்தையா
திரு. நீ. நாகமுத்து
திரு. வே. பாக்கியமுத்து

### திருமகள் அழுத்தகப் பணியாளர்கள்

திரு. ச. இராசரத்தினம்
திரு. ச. உமாசுதன்
திரு. சோ. யோகேந்திரன்
திரு. க. குகதாசன்
திரு. ந. விக்னேஸ்வரன்
திருமதி. உ. நாகராணி
திரு. க. சசிகரன்
திரு. இ. பாலதயாளன்

### தேவஸ்தான தவில் நாதஸ்வர வித்துவான்

திரு. இ. இந்திரகுமார் குழுவினர், மல்லாகம்.

### பூமாலை அலங்காரம்

திரு. வ. பஞ்சலிங்கம் பிள்ளைகள்

### பாதுகாப்புச் சேவை

திரு. க. சிவபாலசுந்தரம்
திரு. சி. சிவலிங்கம்
திரு. மா. சிவகுலம்
திரு. க. சிவராசா

திருமகள் அழுத்தகம்